தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 2-7-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 44வது நிறுவனநாள் விழா

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பல்கலைக்கழகத்தின் 44வது நிறுவனநாள் விழா இன்று (1-7-2014) காலை பட்டமளிப்பு விழா அரங்கத்தில் நடைபெற்றது. இந்த விழாவிற்கு வருகை புரிந்தவர்களை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் இரா. ரபீந்திரன் அவர்கள் வரவேற்றார். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தொடக்க ஆண்டுகளில் அரிதாகவே பெண்கள் பயின்றனர். இன்று 75 சதவிகிதம் மாணவிகள் வேளாண்மைப் பட்டப்படிப்பை பயில்கின்றனர். தமிழகத்தின் முதல்வராக பெண் தலைவர் ஒருவர் ஆட்சி செய்துவரும் இக்காலகட்டத்தில் இந்தச் செய்தி மகிழ்ச்சிக்குரியதே.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கு. இராமசாமி அவர்கள் தன்னுடைய தலைமையுரையில், "தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வெற்றிக்குக் காரணம் இங்கு பணியாற்றும் கல்வியாளர்களே" எனப் புகழ்ந்துரைத்தார். நாட்டிலுள்ள 64 வேளாண்மைப் பல்கலைக்கழகங்களில் முதன்மையான பல்கலைக்கழகமாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் திகழ்வது, நம் அனைவருக்கும் பெருமையே என்றார். மேலும் அவர் பேசுகையில், "தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு ஆண்டொன்றிற்கு அரசிடமிருந்து 198 கோடி ரூபாய் நல்கைத்தொகை கிடைக்கின்றது. இதில் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்திடமிருந்து 46 கோடியும், மற்ற நிறுவனங்களிடமிருந்து 38 கோடியும் நல்கைத்தொகையாக கிடைக்கின்றது. பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களின் கடுமையான அயராத உழைப்பின் காரணமாக தமிழகத்தின் உணவு தானியஉற்பத்தி 110 இலட்சம் மெட்ரிக் டன் உயர்ந்துள்ளது. கடுமையான வறட்சி, மழையின்மை ஆகிய

காரணிகளால் பாதிக்கப்பட்ட சூழலிலும் நமக்குக் கிடைத்த இந்த வெற்றி பெருமைக்குரியது. பல்கலைக்கழக ஆராய்ச்சிக்கு வெளிநிறுவனங்களிடமிருந்து நல்கைத் தொகையை எதிர்பார்க்கும்நிலை மாறி உழவர்மைய ஆய்வுகளில் கவனம் செலுத்துவதற்கு மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் எடுத்த முயற்சிகளை நன்றியுணர்வுடன் கூறக் கடமைப்பட்டுள்ளேன் என்றார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இருகண்கள் போல செயல்படுபவர்கள் உழவர்களும் மாணவர்களும் ஆவர். மாணவர்களுடைய கடுமையான உழைப்பினால், பல்வேறு போட்டித் தேர்வுகளில் பல்கலைக்கழகத்திற்குப் பெருமை சேர்த்துள்ளனர். இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழக உதவித்தொகை தேர்வில் 27 மாணவர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

இந்த விழாவில் சிறப்புரையாற்றிய வேளாண்மைத்துறை அமைச்சரும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக இணைவேந்தருமான மாண்புமிகு அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தன் உரையில், தமிழக அரசு வேளாண்மைத்துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகின்றது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் "இரண்டாவது பசுமைப் புரட்சியின் மூலம் விளைச்சலை இரண்டு மடங்காக்குவோம், உழவர்களின் வருமானத்தை மும்மடங்காக்குவோம்" என்னும் செயல்திட்டத்தை வகுத்து இந்தியாவின் முன்னோடி வேளாண்மாநிலமாக தமிழகத்தை மாற்றுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார். இந்தப் பெருமைக்குரிய பல்கலைக்கழத்தை தோற்றுவித்தவர்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நினைவு கூர்ந்தார்.

சோதனைச் சாலைகளில் இருந்து, வேளாண்மை அறிவியலை களத்துமேட்டிற்கு கொண்டு செல்வதற்கான விரிவாக்கப் பணிகளை சிறப்பாக மேற்கொள்ள வேண்டும், அவ்வாறு மேற்கொண்டால்தான் உணவுதானிய உற்பத்தி அதிகரித்து பெருகிவரும், மக்கள்தொகைக்கு ஏற்ப ஊட்டச்சத்து மிகுந்த உணவுப் பொருட்களின் விளைச்சலை அதிகரிக்க இயலும். அதற்கான முயற்சிகளில் பல்கலைக்கழகம் முனைப்பாக ஈடுபட வேண்டும் என்றும் கூறினார்.

வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம் கிராமப்புற வளர்ச்சி, நீர்வள ஆதாரங்களைப் பெருக்குதல், நீர்ப்பாசன மற்றும் நீர்வடிப்பு மேலாண்மைகளை மேற்கொள்ளுதல், கிராமப்புற பண்ணைகளை மேம்படுத்துதல், கிராமப்புறப்

பொருளாதாரத்தை மேம்படுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொண்டால் நிலைத்த, நீடித்த பசுமைப்புரட்சியை ஏற்படுத்தலாம் என்றார்.

உழவர்களுக்குத் தேவையான இடுபொருட்கள், சொட்டுநீர்ப்பாசனக் கருவிகள், 70 ஆயிரம் பண்ணைக் குட்டைகள் ஆகியனவற்றை தமிழக அரசு உருவாக்கிக் கொடுத்துள்ளது. வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் உழவர்களுக்கு தேவையான புதிய தொழில்நுட்பத் தகவல்கள் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் தமிழகம் உலகின் மிக முக்கிய வேளாண் உற்பத்தி மையமாக மாறுவதற்கான வாய்ப்புகள் ஏற்படும் என்றார். தமிழக அரசின் விதைச்சான்றளிப்புத் துறையானது சுவீடன் அரசின் தரச்சான்றளிப்பு விருதினைப் பெற்றுள்ளது என்றும் கூறினார்.

மேலும், ''வேளாண் விஞ்ஞானிகள் மருத்துவத்துறை வல்லுநர்களைப் போல தொழில்நுட்பத் திறன் படைத்தவர்களாக மாறவேண்டும்'' என வேண்டுகோள் விடுத்தார். மேலும், மாணவர்கள் தரமான கல்வி கற்று உழவர்களுக்குத் தேவைப்படும் தொழில்நுட்பங்களை வழங்கக்கூடிய வல்லுநர்களாக மாறவேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

இந்தி விழாவில், பல்கலைக்கழகத்தின் சிறந்த ஆராய்ச்சியாளர், சிறந்த ஆசிரியர் உள்ளிட்ட 14 விருதுகள் அமைச்சர் அவர்கள் வழங்கினார். பல்கலைக்கழகத்திற்காக 25 ஆண்டுகள் உழைத்த 144 கல்வியாளர்கள், அலுவலர்கள் ஆகியோருக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

விழாவின் நிறைவில் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் எம். மகேஸ்வரன் அவர்கள் நன்றி கூறினார்.

மக்கள் தொடர்பு அலுவலர்


01.07.2014
FOUND


01.07.2014
44th


TAMIL NADU AG
VERSITY
01.07.2014
44


TAMIL NADU AG
ULTURAL
மாண்புமிகு வேளாண்மைத்துறை
அமைச்சர்


தமிழ்நாடு
CULTURAL
மாண்புமிகு வேளாண்மைத்துறை
அமைச்சர்


தமிழ்நாடு
NADU
CULTURAL
துணை வேந்தர்
மாண்புமிகு வேளாண்மைத்துறை
அமைச்சர்


தமிழ்நாடு
மாண்புமிகு வேளாண்மைத்துறை
அமைச்சர்

ஆவது
01.07.2014